


24.02.2025

## 8. வாலிபனே ‘இரவில்’ கர்த்தர் உன் நினைவாய் இருக்கிறாரா?

**இ**ளைஞன் தாவீது, தன் இரவு படுக்கையில் “வேதத்தை அல்ல” தன் “கர்த்தரையே முன் வைத்து” தியானித்தான்! இந்த தாவீதின் சங்கீதம்.13:5,6-ம் வசனங்கள், பரிசுத்தாவியின் வல்லமை கொண்டு, நம் இறுதிகால ஜீவியம் வரை நமக்கும் “மெய்யாய் நடந்தேற” தேவனிடம் கெஞ்சுவோமாக! இந்த வாலிப *தாவீது,* இராக்காலத்தில் தன் படுக்கையில் சாய்ந்த போதெல்லாம், “கர்த்தர் மீது கொண்ட தியானமே” அவனது மகிழ்ச்சியும், பரவசமும், மன திருப்தியுமாய் இருந்தது! இன்று, வாலிபர்களாகிய நாமும், நம் படுக்கைக்கு இரவு செல்லும் போதெல்லாம், “நம் சிந்தை முழுவதும் கர்த்தரையே சுற்றிச் சுற்றி வருவது” தேவனுக்கு எத்தனை மகத்துவத்தை கொண்டுவந்து சேர்க்கும்!

– ரத்னம்